## RECORD OF DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI
## KRISHNAGIRI DISTRICT

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | OS 270 of 2004 | **PW - 1** | : | Cross |
| **Name** | தமிழ் | **Father Name** | : | தனபால் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 19.02.2026 administered by District Munsif, Uthangarai.

துவக்க நேரம் -11.28 AM

1,3,5,9, 10 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:

1. தாவா இரண்டாம் இட சொத்து உப்பாரப்பட்டி கிராம சர்வே எண் 2/1 யார் பெயரில் சிட்டா உள்ளது என்றால் காளி கவுண்டர் பெயரில் உள்ளது. வா.சா.ஆ 2 ஆவணத்தில் மேற்படி சர்வே எண் இல்லை என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ 2 எனது அப்பா பெயரிலும் காளி கவுண்டர் பெயரிலும் கூட்டாக உள்ளதை காட்டுவதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். மேற்படி சர்வே எண்ணிற்கான சிட்டாவை நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். சர்வே எண் 2/1 க்கு கூட்டு பட்டாவும் இல்லை எங்கள் பெயரில் தனிப்பட்டாவும் இல்லை எதன் அடிப்படையில் அதில் நாங்கள் பாகம் கோருகிறோம் என்றால் அது பரம்பரை சொத்து நாங்கள் வாங்கியது நில உடமை மேம்பாட்டு திட்டத்தின் போது பட்டா மாற்றிக் கொண்டனர் அதனால் அதில் பாகம் கோருகிறோம். அவ்வாறு வாங்கியதற்கான ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளோம் என்றால் எங்கள் பெரிய தாத்தா வாய்மொழி மூலமாக சொல்லி நாங்கள் வாங்கியது அதனால் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. நான் சொல்வது தவறு மேற்படி நிலத்தை நாங்கள் வாய்மொழியாகவோ ஆவணம் மூலமாகவோ வாங்கவில்லை அது காளி கவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்பதால் தான் அவர் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. தாவா இரண்டாம் இனம் சொத்தில்

உள்ள கிணற்றிற்கு மின் இணைப்பு யார் பெயரில் உள்ளது என்றால் காளி கவுண்டர் பெயரில் உள்ளது. எங்கள் அப்பா பெயரிலோ அல்லது வேறு யார் பெயரிலோ கூட்டாக இல்லை என்று சொன்னால் சரிதான்.

2. எங்கள் தாவாவில் வேங்கா கவுண்டரின் வாரிசுகளாக காட்டப்பட்டுள்ள குப்பன் என்பவர் 32 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் ஆகாமல் இறந்து விட்டார் என்று கூறியுள்ளோம் அவருக்கு காளியம்மாள் என்ற மகளும் காளியம்மாளுக்கு சென்ன கிருஷ்ணன் என்ற ஒரு மகனும் உள்ளனர் சென்ன கிருஷ்ணன் இறந்துவிட்ட பின் அவருக்கு கோவிந்தம்மாள் என்ற மனைவியும் பிரபு காளி ரத்தினம் என்ற மகன்களும் ஜானகி என்ற மகளும் உள்ளனர் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. மேற்படி தாவாவில் குப்பன் என்பவரின் வாரிசுகளை சேர்க்காததால் தாவா தள்ளுபடி ஆகவேண்டும் என்று சொன்னால் சரியல்ல குப்பனுக்கு அங்கு சொத்து இல்லை. வேங்கா கவுண்டர் மகன் குப்பன் அவருடைய பாக சொத்தை வேறு யாருக்காவது விற்பனை செய்ததற்கான ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளோமா என்றால் அவர் வாய்மொழி கிரையம் கொடுத்து விட்டார். தாவா இரண்டாம் இன சொத்தில் எட்டில் இரண்டு பங்கு கேட்டு தாவா தாக்கல் செய்துள்ளோம் யார் யாருக்கு அந்த பாகங்கள் என்றால் காளி கவுண்டருக்கும் பத்தன் என்கிற பச்சையப்பா கவுண்டர் இருவருக்கும் மட்டும். நான் சொல்வது தவறு அந்த சொத்துக்களில் காளி கவுண்டர், பத்தன், குப்பன் ஆகிய மூன்று பேருக்கும் பாகம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல குப்பன் விற்பனை செய்து விட்டார்.

3. எனது தந்தை பிரதிவாதிகளுக்கு கொடுத்த வா.சா.ஆ 5 சட்ட அறிவிப்பில் தாவா இரண்டாம் என சொத்தில் பொதுவில் பாதி என்றும் உப்பாரப்பட்டி கிராம சர்வே எண்.2/1 குறித்து எந்த குறிப்பு இல்லாமலும் சட்ட அறிவிப்பு அனுப்பி உள்ளார் என்று சொன்னால் அது எனக்கு தெரியவில்லை. வா.சா.ஆ 5 ஆவணத்தில் உப்பாரப்பட்டி கிராம சர்வே எண்.2/1 உள்ளதா என்றால் சாட்சி வா.சா.ஆ 5 ஆவணத்தை

பார்த்துவிட்டு அந்த சர்வே எண் இல்லை என்று கூறுகிறார். தாவா 1 ஆம் இன சொத்தை பொறுத்து நாங்கள் உரிமை விளம்புகை கோரி உள்ளோம் என சொத்தை நாங்கள் பாகப்பிரிவினை செய்து பின்பு கவிதா என்பவருக்கு விற்பனை செய்துள்ளதால் கவிதா என்பவர் தரப்பினராக சேர்க்காத காரணத்தால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கள் உட்பிரிவு ஏற்பட்டுள்ளதால் அவ்வாறு உட்பிரிவு செய்யப்பட்ட சர்வே எண்களை தாவாவில் குறிப்பிடாததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல எங்களுக்குள் நாங்கள் உட்பிரிவு செய்து கொண்டோம். தாவா இரண்டாம் இன சொத்தில் உள்ள உப்பாரப்பட்டி கிராம சர்வே எண்.2/1 எங்களுக்கு எந்தவித உரிமையும் இல்லாததால் அதில் பாகம் கோரி தாக்கல் செய்துள்ள இந்த தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**முடிவு நேரம் – 11.51 AM**

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

Sd/-XXXXX

District Munsif(FAC),
Uthangarai.